உதவவேண்டுமென்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டன. ஆகவே, மார்க்கெட் விலையைக் கணக்கிட்டு குறைந்த விலையில் நெசவாளர்களுக்கு நூல் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விலையை குறைத்துக்கொடுப்பது என்பது வேறு. கூட்டுறவு நெசவாலைகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவது என்பது வேறு. இரண்டாவதை ஒப்புக்கொள்ள முடியாது.

*Rise in price of silk sarees.*

*308 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government are aware of the increase in prices of Kancheepuram, Kollegal, etc., sarees in the State; and

(b) if so, the action taken to arrest the rise in prices?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) கச்சாப்பட்டு, சரிகை, வண்ணச் சாயம், இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றின் விலை உயர்வினால் பட்டுச் சேலையின் உற்பத்தி மதிப்பு உயர்ந்ததன் காரணமாக பட்டு சேலையின் விலையும் உயர்ந்துள்ளது. இவற்றில் ஒரு சில கச்சாப் பொருள்கள் மைசூர், குஜராத் போன்ற மாநிலங்களிலிருந்து வாங்கவேண்டியுள்ளது. அங்கு இதற்கென என்று விலைக்கட்டுப்பாடும் இல்லை. இருப்பினும் கச்சாப்பட்டின் விலையினைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மத்தியப் பட்டு வாரியமும் இந்திய அரசும் கேட்டுக்கொள்ளப்பட்டன. கொள்ளேகால் தமிழ் நாட்டில் இல்லை.

**திரு. கி. ஜெயராமன் :** நம்முடைய மாநில கைத்தறி கார்ப்பரேஷன் மூலமாக தனியாருக்கும், கூட்டுறவு சங்கத்திற்கும் சாய மருந்து நியாயவிலையில் வாங்கிக் கொடுப்பதுபோல் மைசூரிலிருந்து பட்டு நூலையும் அரசே வாங்கித் தர முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வாங்குவதில் சிக்கல் இல்லை. அடிக்கடி மைசூரில் இருந்து கச்சாப் பட்டு கிடைக்காத காரணத்தினால், வெளிநாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதி செய்யப்பட்டு விடுகிற காலத்தில் விலை உயர்வு ஏற்படுகிறது. சில்க் போர்டு இதை கவனத்தில் கொண்டு நெசவாளர்கள் பாதிக்கப்படாதிருக்க வழிவகை செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாநிலத்தில் இருந்து அனுப்பப்படும் பட்டுப் பொருள்களின் மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணி மாநிலத்திற்கே கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது பட்டுச் சேலையின் விலை உயர்வைப் பற்றியது.

*1971 ஜூலை 19]*

**திரு. கே. ஏ. சொ[illegible] :** இப்போது தாளவாடியில் கூட்டுறவுச் சங்கம் மூலமாக பட்டு உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. நமது நாட்டிலேயே அறிஞர் அண்ணு அவர்களால் புகழ்பெற்ற காஞ்சிபுரம் பட்டுக்கும் புகழ்பெற்றிருக் கிற காரணத்திஞல் பட்டுநூல் விலையைக் குறைக்க அதிக அளவில் அங்கே உள்ள கூட்டுறவு சங்கத்தை அபிவிருத்தி செய்ய முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பட்டுச் சேலை உற்பத்தியில் சங்கடம் ஏற்படவில்லை. இதற்குத் தேவையான மூலப்பொருளை மைசூரில் இருந்து வாங்குவதில் சிக்கல் இருக்கிறது. இதைத் தவிர்க்கத்தான் இப்போது அரசாங்கம் ஹோசூர், தாளவாடிப் பகுதியில் பட்டுநூல் உற்பத்தியை வெற்றிகரமாக அதிகப்படுத்த எல்லா நடவடிக்கையும் எடுத்து வருகிறது.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** தற்சமயம் பட்டு விலை குறைந்து 160-க்கு விற்கிறது என்று அறிக்கை கூறுகிறது. ஆனல் கூட்டுறவு சங்கங்கள் முகூற்கொண்டு பட்டுச்சேலை விலையைக் குறைக்காமல் இருக்கிருர்கள். சேலைகளின் விலையைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பட்டுக்களின் விலை அடிக்கடி இறங்குவதும், ஏறுவதுமாகத்தான் இருக்கின்றன. மைசூரில் இருந்து அதிக அளவு ஏற்றுமதி செய்யப்பட்டால் ஏறி விடுகிறது. இல்லையானல் விலை குறைகிறது.

**திரு. சோ. கருணைநாதன் :** காஞ்சீபுரம் பட்டுக்கு வெளிநாடு களில் கிராக்கி உண்டா ? ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஓரளவு ஏற்றுமதி செய்யப் படுகிறது. முழு விவரம் இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** சூரத்தில் இருந்து ஜரிகையை எதிர் பார்த்து நிற்கிற காலம் மாறவேண்டும் என்பதற்காக 25 லட்சம் ரூபாயில் காஞ்சிபுரம் அருகே ஜரிகைத் தொழிற்சாலை வருகிறது. அதுபோல மைசூரில் இருந்து பட்டுநூலை எதிர்பார்த்திருக்கிற காலம் மாற இங்கேயே பட்டுநூலை உற்பத்தி செய்ய அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதைத்தான் முன்னர் விளக் கினேன். நம்முடைய மாநிலத்திலேயே உற்பத்தி செய்ய ஹோசூர், தாளவாடி பிர்காவில் வாய்ப்பு இருக்கிறது. அது பூராவையும் கண்டறியத்தான் தனி அலுவலரை அங்கே அனுப்பி அது பற்றிய முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது.

THIRU B. VENKATASWAMY : From the answer given by the Hon. Minister that Thalavadi and Hosur are having good climatic condition to improve the production of silk, may I know from the

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Hon. Minister whether this Government will take some intensive steps so as to increase silk production, where there is large potentiality in that area. Will this Government come forward to take some immediate steps to implement it intensively?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு உறுப்பினருக்கே இது பற்றித் தெரியும். அவரது பகுதியில் ஸ்டேட் பார்மிங் முறையில் அத்தகைய முயற்சிக்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். அங்குள்ள விவசாயிகள் நிலத்தைச் சொந்தமாக்கவேண்டும்—குத்தகைக்கு வேண்டாம் என்கிறார்கள். நிலத்தைச் சொந்தமாக்கினால் அவர்கள் பட்டுப்புழுவுக்காக இந்தப் பயிரைத்தான் வைப்பார்களா என்பது சந்தேகம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் விவசாயிகளுடன் பேசி இது பற்றி ஒத்துழைப்புத்தர அவர்கள் முன்வரும்படி செய்ய வேண்டும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** குற்றாலம், செங்கோட்டைப் பகுதியில் அபிவிருத்தி செய்ய திட்டம் இருந்ததே, அது கைவிடப்பட்டுவிட்டதா? அல்லது அந்தத் திட்டம் செயல்பட இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசின் சார்பில் அங்கே ஒரு யூனிட் வைத்திருக்கிறோம். பெரும் அளவுக்கு இந்த இடத்திலே உற்பத்தி செய்ய வாய்ப்பு இல்லை என்றே தெரிகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கைத்தறித் துணிகளுக்கு ரிபேட் கொடுப்பதுபோல அரசாங்கம் பட்டுச்சேலைகளுக்கும் தள்ளுபடி கொடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தள்ளுபடி என்றாலே அரசாங்கப் பணம் செலவழியும் என்றுதான் பொருள்.

### இராமநாதபுரம் மாவட்டத்தில் பனை ஓலைப்பொருட்கள்.

* 309 வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பனையோலை, ஈக்கி, நார் முதலானவற்றைக்கொண்டு செய்யப்படும் குடிசைத் தொழில்களை நம்பி வாழும் இராமநாதபுரம் மாவட்டத்து லட்சக்கணக்கான மக்கள், உற்பத்தி செய்யும் பொருள்களுக்குப் போதிய விலைவாசி, மார்க்கெட் வசதிகள் இல்லாமல் நசித்து வருவதைத் தடுக்க, அவர்களுக்கு நல்வாழ்வளிப்பதற்கு அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** "இராமநாதபுரம் பனையோலைப் பொருட்கள் உற்பத்தி செய்வோர் கூட்டுறவு குடிசைத் தொழிற்சங்கம்" என்ற ஒரு கூட்டுறவு தொழிற்சங்கம் இராமநாதபுரம் மாவட்டத்தில் இயங்கி வருகிறது. அதன் உற்பத்திப் பொருட்கள் அரசு விற்பனை நிலையங்கள் மூலமாகவும் புதுடில்லியிலுள்ள மத்திய அரசு கைத்தறி மற்றும்—கைவினைப் பொருட்கள் கழகம் மூலமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தரமுள்ள பொருட்கள் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.